அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்:10 /2017
தேதி: 21.1.2017

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.

தமிழ்நாட்டின் பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிக்கு தடை விதிக்கப்பட்டதை எதிர்த்து, தமிழ் உணர்வுள்ள அனைத்து இளைஞர்கள், மாணவர்கள் பல்வேறு அமைப்புகள், மற்றும் தமிழ்நாடு மட்டுமல்லாது உலகளவில் உள்ள அனைத்து தமிழர்களும் குளிர், வெயில், மழை என்று எதையும் பாராமல் ஒன்றிணைந்து போராடி வந்தனர்.

தற்போது மாண்புமிகு தமிழக ஆளுநர் (பொறுப்பு) அவர்கள் அவசர சட்டம் மூலம் ஜல்லிக்கட்டுக்கு இருந்த தடையை நீக்கி உத்தரவு பிறப்பித்துள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஜல்லிக்கட்டுக்கான தடை நீங்கியதாக அறிவித்துள்ளார்.

தமிழர்களின் ஒற்றுமை உணர்வுக்கு மதிப்பளித்து விரைவில் பாராளுமன்றம் கூடியவுடன் இந்த PCA ( Prevention of Cruelty of Animals Act) சட்டத்தில் காளையை காட்சி பட்டியலில் இருந்து நீக்கி சட்டதிருத்தம் செய்து நிரந்தர சட்டம் உடனடியாக பிறப்பிக்க வேண்டும். என்று மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்